# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 22 ISSUE 03 MARCH -2022 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-



## நான் குருடனுக்குக் கண்ணும் சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன்

# ஆசிரியர் உரை

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். 2 தீமோத் 3:1-ல் மேலும் கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக என்ற வார்த்தையின்படி இதுவரை இல்லாத அளவுக்கு சாத்தான் மனிதர்கள் மேல் இறங்கி பயங்கரமாய் கிரியை செய்து வருகிறான். மதவெறியோடு மூர்க்கத்தனமாய் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் செயல்படுவதைப் பார்க்கிறோம். எங்கு பார்த்தாலும் சிலைகளை நாட்டி அதற்கு தூபம் காட்டவும், சுற்றுலா ஸ்தலமாக மாற்றவும் கிரியை செய்து கொண்டு இருக்கிறான். தீமை செய்வதற்கும், பாவம் செய்வதற்கும் ஜனங்கள் ஒருமனமாய் இருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற நாமோ எனக்கென்ன நான் உண்டு, என் வேலை உண்டு என்று சுயநலவாதிகளாய் இருந்து விடுகிறோம். ஆதி சபையிலே, சபைக்கு உபத்திரவமும், எதிர்ப்பும் வந்தபோது எல்லாரும் ஒருமனப்பட்டு ஜெபித்தார்கள், ஒன்று கூடினார்கள். இன்றோ கொரோனாவை காரணம் காட்டி ஆலயத்திற்கு வருவதில்லை, ஜெபிப்பதுமில்லை. பரிதாபமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இந்த நிலைமாறி நாம் கருத்தாய் ஜெபிக்க வேண்டும். கடந்த நாட்களில் நடைபெற்ற எல்லா நேரலை நிகழ்ச்சிகளும், கூட்டங்களும் ஆசீர்வாதமாக இருந்தது. தினமும் நடைபெறுகிற இயேசுவை தினம் பார்ப்போம் நிகழ்ச்சியும், கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் நிகழ்ச்சியும் ஆசீர்வாதமாக நடைபெறுகிறது. அதேபோல் செம்பட்டியில் நடைபெறுகிற உபவாச ஜெபங்களும் ஆசீர்வாதமாகவே நடைபெறுகிறது. நம்முடைய இயேசுவை தினம் பார்க்கிறேன் மாத இதழை முழுவதும் கலரில் பிரிண்ட செய்கிறோம். ஆகவே இதை வாசிக்கிறவர்கள் சந்தா செலுத்தி அல்லது காணிக்கை அனுப்பி ஊழியத்தை தாங்க வேண்டும். தொடர்ந்து உங்கள் மேலான ஜெபத்தாலும், காணிக்கையினாலும் இந்த ஊழியத்தைத் தாங்கி, உதவி செய்யும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறேன். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



அன்புடன் உங்கள் சகோதரர்

L. Vincent Raj

(சகோ. L .வின்சென்ட்ராஜ்)

# நான் குருடனுக்குக் கண்ணும் சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன்



(சகோ. L.வின்சென்ட்ராஜ்)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு உலகம் முழுவதும், எங்கு பார்த்தாலும் கண்தானம், இரத்த தானம் பண்ணுகிறார்கள். மூளைச்சாவு ஏற்பட்டவர்களுடைய கிட்னியை அல்லது இருதயத்தை எடுத்து மற்றவர்களுக்கு பொருத்துகிறார்கள். இப்படி ஒருவருடைய உறுப்பை எடுத்து எத்தனை பேருக்கு பொருத்தி வாழ வைக்க முடியும், உயிர் கொடுக்க முடியும். யாரோ ஒருவருக்குத் தான் அதைச் செய்ய முடியும். ஒரு மாற்று உறுப்பைப் பொருத்த முடியும். ஆனால் இன்றைக்கு நீங்களும், நானும் பின்பற்றுகிற ஆண்டவராகிய இயேசுவோ நமக்காக தம் ஜீவனையே கொடுத்து, நம்மை வாழவைக்க அவர் சிலுவையில் பலியானார். யோவான் 15:13-ல் ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை என்றார். தானத்திலே பெரிய தானம் செய்தவர் இயேசு ஒருவர் மாத்திரமே. அதை உணர்ந்த யோபு பக்தன் ஆண்டவராகிய தேவனைப் பார்த்து இப்படியாகத் துதித்தான். யோபு 29:15-ல் நான் குருடனுக்குக் கண்ணாயிருந்தேன், முடவனுக்குக் காலுமாயிருந்தேன். எளியவனுக்குத் தகப்பனாயிருந்தேன், விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப் பண்ணினேன் என்றார். இன்றைக்கு கண் தெரிகிறது என்று சொல்லுகிற அநேகர் குருடராக தடவித்திரிகிறார்கள். யோவான் 9:39-ல் இயேசு சொன்னார் காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார். இன்றைக்குப் பார்வை தெரிகிறது, கண் நன்றாய் இருக்கிறது, என்பவர்களால் தான் பல பிரச்சனைகள் வருகிறது. உலகத்தில் சாலைகளில், ரோடுகளில் பல விபத்துக்கள், ஏன் விமான விபத்துக்கள், இரயில் விபத்துக்கள் ஏற்படுகிறது, ஆபத்துக்கள் நேரிடுகிறது. யாரால் கண் தெரிகிறது என்பவர்களால் தான். ஏன்? எனக்குத் தெரியும் என்றும், நான் சரியாகத்தான் சென்று கொண்டிருக்கிறேன், எது வந்தாலும் சமாளிக்களாம் என்கிற ஒரு துணிவு. ஆனால் கண் தெரியாது என்று சொல்லுகிற மனிதர்களைப் பாருங்கள். என்னால் நடக்க முடியாது, என்னால் தனியாக எதையும் செய்ய முடியாது, எனக்கு வழிகாட்ட, உதவி செய்ய, துணையாக மற்றொருவர் வேண்டும். இல்லையென்றால் ஏதாவது ஆபத்திலோ, விபத்திலோ சிக்கி விடுவேன். என்னால் பலருக்கு பிரச்சனை வரும் என்று மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பார்கள். இதைத்தான் யோபு தன் ஆகமத்தில் சொல்லுகிறார் குருடனுக்குக் கண்ணாக இருந்தேன், முடவனுக்குக் காலாக இருந்தேன், வழிப்போக்கனுக்கு ஆதரவாய் இருந்தேன் என்கிறார். இன்றைக்கு நமக்கு கண் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தான். அவர் இல்லாமல் எந்த ஒரு ஆசீர்வாதத்தையும், பரலோகக் காரியங்களையும் நாம்மால் பார்க்க முடியாது. சுற்றி சுற்றி பூமியை மாத்திரம் தான் பார்க்க முடியும். சங் 32:8-ல் உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனைச் சொல்லுவேன் என்கிறார். இன்றைக்கு அவருடைய கண்கள் நாம். சகரியா 2:8-ல் உன்னைத் தொடுகிறவன், அவருடைய கண்மணியைத் தொடுகிறான் என்று சொல்லப்பட்டுள்ளது. லூக்கா 11:34,36-ல் கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது, உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும், உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும்

இருளாயிருக்கும். ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. உன் சரீரம் ஒருபுறத்திலும் இருளடைந்திராமல் முழுவதும் வெளிச்சமாயிருந்தால், ஒரு விளக்கு தன் பிரகாசத்தினாலே உனக்கு வெளிச்சம் கொடுக்கிறது போல, உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும் என்றார். அவர் நமக்கு கண்ணுக்கு கண்ணாக, பல்லுக்குப் பல்லாக இருக்கிறார். குருட்டாட்டமான இந்த மாய உலகத்தில் அவர் நமக்கு கண்ணாக இருந்து, பார்வையாக இருந்து தெளிவோடு, வழிவிலகாமல், சரியான வழியில் நடக்கவும், போக வேண்டிய பாதையில் போகவும் நம்மை நடத்துகிறார்.

## பறிபோன பார்வைகள், மங்கிச் சொருகிப்போன பார்வைகள்

அப் 9:17-ல் அப்பொழுது அனனியா போய், வீட்டிற்குள் பிரவேசித்து, அவன் மேல் கையை வைத்து, சகோதரனான சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும், பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். நாங்கள் சிறுபிள்ளையாக இருக்கும்போது எங்கள் குடும்பத்தில் என் தாயாருக்கு திடிரென ஓர் இரவு படுத்து எழுந்திருக்கும் போது இரண்டு கண்களும் தெரியாமல் போய் விட்டது. அந்த நாட்களில் சரியான மருத்துவ வசதி இல்லாததினால் பல நாட்டு மருந்துகள் எல்லாம் எடுத்துப் பார்த்தும் சரியாகவில்லை. அதன் பிறகு அவர்கள் ஏறக்குறைய 30 வருடங்கள் அதே நிலையில் தான் இருந்து மரித்தார்கள். இது என் வாழ்க்கையை மிகவும் பாதித்தக் காரியம். சில சமயங்களில் மழை உண்டானால், இடி இடித்தால், மின்னல் உண்டானால் பார்வை பறி போய்விடுகிறது. பார்வையில்லாதவர்களுடைய வாழ்க்கை பரிதாபமானது. அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையில் இப்படித்தான் பார்வை பறிபோனது. ஏன்? ஒரு நாள் நண்பகல் வேளையிலே, அன்றைக்கு இருந்த அரசாங்கத்திலே ஒரு அனுமதி கடிதத்தை வாங்கிக்கொண்டு அங்கிருக்கிற கிறிஸ்தவர்களை,ஜெபிக்கின்றவர்களை சிறைப்படுத்தவும், துன்பப்படுத்தவும் தமஸ்கு என்ற பட்டணத்தை நோக்கி பிரயாணப்பட்டான். காரணம் மதவெறியனாக, முரடனாக இருந்தான். ஆனால் இன்றைக்கு பாருங்கள் மதவெறியர்கள் முரட்டுத்தனமாய், குண்டர்களாய் நடந்து கொள்வார்கள். யாருக்கும் கட்டுப்படமாட்டார்கள், உண்மையிலே பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள் இப்படித்தான் இருப்பார்கள். மாற் 5:4,5-ல் அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும், சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்துப்போடுவான், விலங்குகளைத் தகர்த்துப்போடுவான்.அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் எப்பொழுதும் இரவும், பகலும் மலைகளிலும், கல்லறைகளிலும் இருந்து கூக்குரலிட்டு கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். சவுல் பவுலாக மாறுவதற்கு முன்பாக இப்படித்தான் இருந்தான். தான் செய்வதுதான் சரி, தான் சொல்லுவது தான் சரி, என்னை கேட்க யாருக்கும் அதிகாரம் இல்லை. இப்படித்தான் வாழ்வேன், இருப்பேன் இதுவும் ஒரு ஊழியம் தான் என்று தன் உள்ளத்திலே ஒரு அகந்தை, பெருமை. அந்த தலைகனத்தினாலே அவன் தமஸ்குவுக்கு போகிறபோது, தான் குதிரைப்படையோடு போனபோது திடிரென சூரியனிலும் அதிக பிரகாசமுள்ள ஒரு வெளிச்சம் அந்த இடத்தில் தோன்றியது. அந்த வெளிச்சத்தின் மிகுதியினால் பார்வை பறிபோனது. அதே இடத்தில் அவன் நிலை குலைந்து பார்வை பறிபோக குருடனாக மாறிப்போனான். சிலருக்குப் பார்வை பறிபோனது, சிலருக்குப் பார்வை மங்கிப்போய்விட்டது. தேவனை எதிர்த்தலோ, அல்லது அவருடைய வழியைவிட்டு விலகினாலோ பார்வையை இழந்து விடுவோம். இதைத்தான் பவுலுடைய வாழ்க்கையில் பார்க்கிறோம். பிலேயாம் என்ற தீர்க்கதரிசி ஒருவர் இருந்தார். அவர் வாழ்ந்த நாட்களில் அவர் சொன்ன வார்த்தை குறிதப்பாது என்று ஜனங்கள் எல்லாரும் நம்பிக் கொண்டிருந்தார்கள். காரணம் வேறுயாரும் அப்போது தீர்க்கதரிசியாக இல்லை.அவர் சபித்தால் சபித்ததுதான், அவர் ஆசீர்வதித்தால் ஆசீர்வாதம் தான். அப்படிப்பட்ட அந்த தீர்க்கதரிசிக்கு தேவனையோ, தேவதூதர்களையோ பார்க்க கண் தெரியாமல் போய்விட்டது. பெரிய பெரிய தொழில் அதிபர்கள், ராஜாக்கள் இவர்களைப் பார்க்க கண் தெளிவாய் தெரிந்தது, தேவனைப் பார்க்க தெரியவில்லை. காரணம்



2 பேதுரு 1:9-ல் வாசித்துப் பார்க்கும்போது இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான். கண் சொருகி அந்தி, இரவு நேரங்களில் பார்க்க முடியாமல், பார்வை குறைந்து, தன்னிடம் உள்ள வெளிச்சம் குறைந்து மங்கிப்போனான். இதைத்தான் பிலேயாம் செய்தான். எண் 22:22-ல் அவன் இஸ்ரவேல் ஜனங்களை சபிக்கப் போகிறதினாலே தேவனுக்குக் கோபம் மூண்டது. கர்த்தருடைய தூதனானவர் வழியிலே அவனுக்கு எதிராளியாக நின்றார். அவன் தன் கழுதையின் மேல் ஏறிப்போனான். கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்துக்கொண்டு வழியிலே நிற்கிறதைக் கழுதை கண்டு, வழியை விட்டு வயலிலே விலகிப்போயிற்று. அதனால் பிலேயாமுக்கு கோபம் வந்து கழுதையைப் போட்டு அடித்தான் கர்த்தர் கழுதையின் வாயைத் திறந்தார். அது ஏன் வழியைவிட்டு விலகிப்போனது என்பதற்கான காரணத்தை சொல்லிற்று. கழுதைக்குத் தெரிந்தவழி, கழுதைக்குக் கிடைத்த வெளிச்சம் பிலேயாமுக்கு இல்லை. காரணம் பணஆசை, உலக ஆசை, சொத்து ஆசை எப்படியாவது இந்தப் பணத்தை வாங்கி விடவேண்டும், காணிக்கையைப் பெற்று விடவேண்டும் என்று அலை மோதினான்.. காரணம் கண் சொருகிப்போன, குருட்டாட்டம் பிடித்துக் கொண்டது. பூனைப்பால் குடிக்கும்போது, அதாவது சமையல் அறையில் இருக்கும் பாலை திருட்டுத்தனமாய் குடிக்கும்போது உலகமே இருளாயிருக்கும் என்று நினைத்துக் குடிக்குமாம். அப்படித்தான் பிலேயாமும் தவறு செய்யும் போது யாருக்குமே தெரியாது, தேவனுக்கும் கூட தெரியாது என்று நினைத்தான். ஆனால் ஆண்டவர் அவன் குருட்டாட்டத்தை மாற்றி, கண் சொருகிப்போனதை மாற்றி அவன் கண்களைத் திறந்தார் எண் 22:31 அப்படிச் சொல்லுகிறது. இன்றைக்கு அநேக தேவபிள்ளைகள், தேவ மனிதர்கள் தேவனுடைய பாதையை விட்டு, தேவனுடைய சித்தத்தை விட்டு தவறும் போது, வழிவலகும் போது கண் சொருகி குருடர்களாக போய் விடுகிறார்கள். தேவனுடைய வழி நமக்கு மறைக்கப்படுகிறது. ஆகவேதான் இதை உணர்ந்த, இந்த தவறை கண்டுபடித்த ஏசாயா தீர்க்கதரிசி ஏசா 59:10-ல் நாங்கள் குருடரைபோல் தடவுகிறோம். இரவில் இடறுகிறது போலப் பட்டப்பகலிலும் இடறுகிறோம். செத்தவர்களைப் போல் பாழிடங்களில் இருக்கிறோம் என்று தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி, அந்த குருடாட்டத்தை, கண் சொருகிப்போன வாழ்க்கையை சரி செய்து கொண்டார். ஆனால் ஏலி என்ற தீர்க்கதரிசியைப் பாருங்கள் 1 சாமு 3:2-ல் ஒருநாள் ஏலி தன்னுடைய ஸ்தானத்திலே படுத்துக்கொண்டிருந்தான், அவன் பார்க்கக் கூடாதபடிக்கு அவனுடைய கண்கள் இருளடைந்திருந்தது. ஆனால் அதே நேரத்தில் மோசேயின் வாழ்க்கையைப் பார்க்கும்போது அவருக்கு 120 வயது. உபா 34:7 சொல்லுகிறது மோசே மரிக்கிறபோது நூற்றிருபது வயதாயிருந்தான், மோசே கண் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை. காரணம் தேவனுடைய திட்டத்திலே, சித்தத்திலே, அவருடைய வழிகளிலே நின்று, அவரை விட்டு பின்வாங்காமல், வழி விலகாமல் இருந்தான். அதனால் அவன் பார்வை மங்காமல், அவன் வெளிச்சம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மங்காத ஒரு வாழ்க்கையாக, பிரகாசிக்கிற ஒரு வாழ்க்கையாக இருந்தது. ஆனால் ஏலி தேவனுடைய வழியை விட்டுவிலகி அவர் சித்தத்தைச் செய்யாமல், தேவனுடைய கோபத்திற்கு உள்ளாகி கண்மங்கி, சொருகிப் போனான். 1 சாமு 2:33-ல் என் பலிபீடத்தில் சேவிக்க, நான் உன் சந்ததியில் நிர்மூலமாக்காதவர்களோ, உன் கண்களைப் பூத்துப்போகப்பண்ணவும், உன் ஆத்துமாவை வேதனைப்படுத்தவும் வைக்கப்படுவார்கள் என்றார். இதுதான் இன்றைக்கு தேவனைவிட்டு வழிவிலகுகிற அநேகருடைய வாழ்க்கையில் நடக்கிறது. கண் சொருகிப்போய், குருட்டாட்டம் பிடித்து, தேவனுடைய வழியில் நடக்காமல, அவர் சித்தத்தை செய்யாமல், கண் பார்வை இழந்த வாழ்க்கை வாழ்கிறார்கள். இந்த இழந்த கண் பார்வை நமக்குத் திரும்ப கிடைக்க வேண்டுமானால் வெளி 3:18-ல் ஆண்டவராகிய தேவன் நமக்குச் சொன்ன ஆலோசனையின்படி நீ பார்வையடையும்படிக்கு, உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். இன்றைக்கு அவருடைய இரத்தத்தால், அவருடைய வார்த்தையால் கழுவப்பட வேண்டும், சுத்திகரிக்கப்பட வேண்டும், பரிசுத்த ஆவியானவரைப் பெற வேண்டும். அவருடைய அபிஷேகத்தால் நிரம்ப

**இன்றைக்கு அநேக தேவபிள்ளைகள், தேவ மனிதர்கள் தேவனுடைய பாதையை விட்டு, தேவனுடைய சித்தத்தை விட்டு தவறும் போது, வழிவலகும் போது கண் சொருகி குருடர்களாக போய் விடுகிறார்கள்**

வேண்டும். இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஆண்டவராகிய தேவன் செய்தார். அவரைப்பிடித்திருந்த செதில்கள், திரைகள் விலகும்படி அனனியா என்ற தேவமனிதனை அனுப்பி பார்வையடைவாயாக, பார்வை பெறுவாயாக என்று கண்களை திறந்தார். இன்றைக்கு அந்த தேவன் யார் யார் எல்லாம் எனக்கும் தேவனுடைய பார்வை வேண்டும், தேவனுடைய வழியில் நடக்க வேண்டுமென்று தன்னைத் தாழ்த்துகிற அத்தனை பேருக்கும் தேவன் தயவாய் இரங்கி ஆசீர்வாதத்தைக் கட்டளையிட்டு, மங்காத வாழ்க்கையை, பிரகாசிக்கிற ஒரு வாழ்க்கையை தந்து ஆசீர்வதித்து நடத்துவார். என் தேவன் தாமே நீங்கள் பார்வை அடையும்படி கண்களைத் திறப்பாராக.

## திறக்கப்பட்ட கண்கள்

அதற்கு அவர்கள், ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்கவேண்டும் என்றார்கள். இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார். உடனே அவர்கள் பார்வையடைந்து அவருக்குப் பின்சென்றார்கள். மத் 20:33,34. இரண்டு குருடர்கள் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு ஆண்டவரே நாங்கள் பார்வை பெறவேண்டும், கண் இருந்தும் காணாதவர்களாய் இருக்கிறோம். பார்வை இருந்தும் தெளிவு இல்லை. மாற் 8:24-ல் சொல்லும் போது நடக்கிற மனுஷரை மரங்களைப் போலக் காண்கிறோம் என்றார்கள். இன்றைக்கு நம்முடைய வாழ்க்கையில் இப்படித்தான் பார்வை இருக்கிறது, தெளிவானப் பார்வையில்லை. கண் தெரிகிறது ஆனால் குருட்டாட்டமாய் காணப்படுகிறது. தேவனுடைய காரியங்களை, தேவனுடைய திட்டங்களை நம்மால் தெளிவாய் அறிந்து கொள்ளவோ, புரிந்துகொள்ளவோ முடியவில்லை. திறை மறைப்பது போல மறைக்கப்படுகிறது. 2 கொரி 4:4-ல் தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். மனக்கண்ணைக் குருடாக்கி, தடவி திரிகிறதுபோல ஆக்கிவிட்டான். இன்றைக்கும் இந்த இருதயக் கண்களை, மனக்கண்களை திறக்க உலகத்தாலும், யாராலும் முடியாது. ஆண்டவராகிய இயேசுவால் மட்டுமே முடியும். அதனால் தான் அவர் பலமுறை எருசலேமின் குடிகளைப் பார்த்து



மக்களைப் பார்த்து அழுதார். லூக்கா 19:42-ல் இப்பொழுதோ, அவைகள் உன கண்களுக்கு மறைவாயிருக்கிறது, உனக்கு வரப்போகிற தீமைகள், ஆபத்துக்கள் தெரியாமல் நீ மேலோட்டமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறாய்.. உன் கண் திறக்கப்படுவது அவசியமாயிருக்கிறது என்றார். பழைய ஏற்பாட்டில் ஆகார் என்ற பெண் தாகத்தோடு தண்ணீர் இல்லையே என்று அழுதபோது, கதறியபோது ஆண்டவர் குளத்தையோ, ஆறுகளையோ காட்டவில்லை. உடனே அவள் கண்களைத்தான் திறந்தார். ஆதி 21:19 அப்படிச் சொல்லுகிறது. அதுவரை தேவன் ஆகாருக்கு ஆயத்தம் பண்ணின ஆசீர்வாதத்தை பார்க்க முடியாதபடி கண்கள் மங்கி, குருட்டாட்டமாக இருந்தது. இன்றைக்கும் இதனால் தான் வேதம் சொல்லுகிறது பார்வை பெற வேண்டும், கண்கள் திறக்கப்பட வேண்டும் என்று. சீஷர்களுடைய வாழ்க்கையைப் பாருங்கள் இயேசு அவர்களோடு சேர்ந்துதான் வழிநடந்து போகிறார் என்று லூக்கா 24:16 சொல்லுகிறது ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது.இயேசுவோடு வாழ்ந்தவர்கள், பழகினவர்கள், அவர் சத்தத்தைக் கேட்டவர்கள் ஆனால் இப்பொழுது அவரை காண முடியாதபடிக்கு அவர்கள் கண்கள் கட்டப்பட்டிருக்கிறது. இதை அறிந்த இயேசு லூக்கா 24:30,31-ல் இயேசு அவர்களோடே பந்தி இருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள், தெரிய வேண்டிய விதத்திவ் அவரை தெரிந்து கொண்டார்கள். 45-ஆம் வசனத்தில் திரும்ப அவர்களுடைய மனதை அவர் திறந்தார், மந்த நிலையை மாற்றினார். இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே நாம் பார்வை பெறவும், கண்கள் திறக்கப்படவும் தேவன் விரும்புகிறார். நம்முடைய குருட்டாட்டம் மாறவும், மங்கிப்போன பார்வை பிரகாசிக்கவும் விரும்புகிறார். இன்றைக்கு அந்த இயேசுவைப் பார்த்து ஆண்டவரே, நான் பார்வை பெறவேண்டும், பரலோகத்தைப் பார்க்கவும், உம்மைத் தரிசிக்கவும், உமக்குப் பிரியமாய் வாழவும் என் கண்களைத் திறந்தருளும் என்று வேண்டிக் கொள்ளுங்கள், கேளுங்கள். கேட்கிற எவனும் பெறுகிறான் என்ற வார்த்தையின்படி என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களைப் பார்வையுள்ளவர்களாக மாற்றுவாராக.
எபேசியர் 1:19 ல் சொல்லப்பட்ட வார்த்தையின்படி பிரகாசமுள்ள மனக்கண்களை கொடுப்பாராக. உங்களை கண் திறக்கப்பட்டவர்களாக மாற்றுவாராக ஆமென்.

# பிள்ளைகளே
# எனக்கு
# செவிகொடுங்கள்



சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

இதுவரை இல்லாத அளவு விஞ்ஞான வளர்ச்சி, நாகரீக மாற்றங்கள், ஊடகங்கள் வழியாக சினிமா, சின்னத்திரை, சிற்றின்பங்கள் யூ-டியூபில் விதவிதமான சமையல், அழகுக்குறிப்புகள், விதவிதமான வைத்திய முறைகள், வீட்டுத்தோட்டம் என்று அடுக்கிக் கொண்டே போகக்கூடிய அளவுக்கு பொழுது போக்குகள். இவைகள் நடுவே நம் ஆண்டவர் இயேசுவின் மெல்லிய சத்தம் கேட்க அநேகருக்கு நேரமில்லை, விருப்பமில்லை, முடியவில்லை. சவால்கள் நிறைந்த உலகத்தில் பிள்ளைகள் வளர்ப்பு மிக கடினமானதாய் இருக்கும். இந்த நாட்களில் ஆண்டவர் நம்மைப் பார்த்து பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள், என் வாயின் வார்த்தைகளை கவனியுங்கள். (நீதி 7:24) என்கிறார். இதே நீதி. 5:7-ல் பிள்ளைகளே, இப்பொழுது எனக்குச் செவிகொடுங்கள், என் வாயின் வசனங்களை விட்டு நீங்காதிருங்கள். நீதி 8:32-ல் பிள்ளைகளே, எனக்கு செவிகொடுங்கள், என் வழிகளை காத்து நடக் கிறவர்கள் பாக்கியவான்கள் என்று வாசிக்கிறோம் கவனியுங்கள் வசனங்களை விட்டு, வழிகளை விட்டு, நீங்காமல் காத்து நடவுங்கள் என்பதாக ஆண்டவர் நமக்கு சொல்கிறார். இதையே ஏசாயா 28:23-ல் செவிகொடுத்து என் சத்தத்தை கேளுங்கள். நான் சொல்வதைக் கவனித்து கேளுங்கள் என்று ஆண்டவர் சொல்கிறார். பள்ளிக்கூடத்தில் பாடம் நடத்தும் ஆசிரியரின் வார்த்தைகளைக் கவனியாமல் பிள்ளைகள் அங்கும் இங்கும் அலசடித்தால் மேஜையின் மீது ஒரு தட்டு தட்டி கவனி என்பார்கள். அதுபோல ஆண்டவர் என் சத்தத்தை, நான் சொல்வதை கவனித்து கேளுங்கள் என்கிறார். கவனித்து கேட்காத எதையும் சரியாக, நிறைவாக நம்மால் செய்யமுடியாது.

ஏசாயா 51:4-ல் என் ஜனங்களே எனக்கு செவிகொடுங்கள். என் ஜாதியாரே என் வாக்கை கவனியுங்கள். வேதம் என்னிலிருந்து வெளிப்படும். என் பிரமாணத்தை ஜனங்களின் வெளிச்சமாக ஸ்தாபிப்பேன் என்கிறார்.

ஏசாயா 55:2-ல் நீங்கள் உங்கள் பணத்தையும், பிரயாசத்தையும் திருப்தி செய்யாத ஒன்றுக்காக செலவழிப்பானேன்? நீங்கள் எனக்கு கவனமாய் செவிகொடுத்து நலமானதை சாப்பிடுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும் என்று சொல்கிறார். நீங்கள் எனக்கு கவனமாய் செவி கொடுத்தால் வேதம் என்னிலிருந்து வெளிச்சமாக உங்களுக்கு வெளிப்படும். இந்த நலமான வார்த்தையை நீங்கள் சாப்பிட்டால் உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியடையும். புஷ்டியாகும் என்கிறார். நாம் உயிர் வாழ்வதற்கு அன்றாடம் உழைக்கிறோம். நமக்கு ஏற்ற ஒரு வருமானத்தில் உணவு வகைகள் சாப்பிட்டு, பெலனடைந்து சரீரப்பிரகாரமாக வாழ்கிறோம். ஆனால் தேவனுடைய வாரத்தையால் நம் ஆத்துமா பிழைக்கிறது. அதனால்தான் ஆண்டவர் மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்றார் மத்தேயு 4:4. நம்முடைய ஆத்துமாவில் பெலன் இல்லாவிட்டால் நம் மனம் சோர்ந்துவிட்டால், எவ்வளவு விதவிதமான உணவுகளைச் சாப்பிட்டாலும், மருந்துகளை எடுத்து கொண்டாலும் பிரயோஜனமில்லை. நம்முடைய வாழ்க்கையில் நாம் சந்தித்து வரும் ஒவ்வொரு போராட்டத்திலும், பிரச்சனைகளிலும், நம் மனம் தான் முதலில் சோர்ந்து விடுகிறது. அந்த சோர்வினால் சரீரம் பாதிக்கப்படுகிறது. சரீரம் பாதிக்கப்பட்டால் வெளிப்பிரகாரம் மருந்துகளை உபயோகித்து

ஓரளவு திடனடைந்து விடலாம். ஆனால் இந்தமனச்சோர்வுக்கு மருந்தே  இல்லை. ஆத்துமா பெலவீனத்திலிருந்து வெளி வர ஒன்றே ஒன்று. அது கர்த்தருடைய வேதம். அவர் வாயின் வார்த்தைகளை நாம் உட்கொண்டால், நம்பினால் அதுதான் பெலன். ஆறுதல், மனமகிழ்ச்சி. ஆண்டவர் இயேசு தம் சீஷரில் சிலரை அழைத்துக் கொண்டு மறுரூபமலையில் ஏறி அவர்களுக்கு முன்பாக மறுரூபமானபோது அவர் முகம் சூரியனைப் போல பிரகாசித்தது. மத்தேயு 17:5-ல் ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேசகுமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்கு செவிகொடுங்கள் என்ற சத்தம் அந்த மேகத்திலிருந்து உண்டானது. நாம் யாருக்கு செவிகொடுக்க வேண்டும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு, அவரது வார்த்தைக்கு செவிகொடுக்க வேண்டும் என்று வேதம் சொல்கிறது. எரேமியா 7:23-ல் என் வாக்குக்குச் செவிகொடுங்கள். உங்களுக்கு நன்மையுண்டாக அதிலே நடவுங்கள் என்று ஆண்டவர் சொல்கிறார்.

## எனக்கு செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்கிறேன்

எனக்கு செவிகொடுங்கள் என்று யாருக்கு ஆண்டவர் சொல்கிறார். லூக் 6:27-ல் அவருக்கு செவிகொடுக்கிற அவருடைய பிள்ளையாகிய நம்மைப் பார்த்துதான் சொல்கிறார். உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள். இப்படி நாம் நடக்க வேண்டிய பல வழிகளை நமக்கு தேவன் சொல்லியிருக்கிறார். ஏசாயா 48:1-ல் இஸ்ரவேலென்னும் பெயர் பெற்று யூதாவின் நீரூற்றிலிருந்து சுரந்தவர்களும், கர்த்தருடைய நாமத்தின்மேல் ஆணையிட்டு உண்மையும், நீதியும் இல்லாமல் இஸ்ரவேலின் தேவனை அறிக்கையிடுகிறவர்களுமான யாக்கோபின் வம்சத்தாரே கேளுங்கள். இந்த வசனத்தை ஆழ்ந்து கவனித்து வாசியுங்கள். எனக்கு செவிகொடுக்கிற என் பிள்ளையே, உனக்கு நான் சொல்லுகிறேன். இஸ்ரவேல் என்னும் பெயருண்டு. யூதாவின் நீரூற்றிலிருந்து சுரந்தவர்கள்தான்! கர்த்தரின் நாமத்தில் ஆணையிடுகிறவர்கள். இஸ்ரவேலின் தேவனை அறிக்கையிடுகிறவர்கள்.யாக்கோபின் வம்சத்தார்தான்! ஆனால் உண்மையும், நீதியும் இல்லாமல் இருக்கிறதை ஆண்டவர் காண்கிறார்.

8 ஆம் வசனத்தில் நீ துரோகம் பண்ணுவாய் என்பதையும், நீ மீறுகிறவனென்றும் அறிந்திருக்கிறேன். ஆண்டவருக்கு செவிகொடுக்கிற நம் வாழ்வில் உண்மை இருக்கிறதா? நீதி இருக்கிறதா? உண்மை என்றால் ஏதோ ஒரு விஷயத்தில் பொய் பேசாமல் வாழ்கிறதல்ல; நம் வாழ்க்கை முழுவதிலும் நாம் நடந்து கொள்கிற விதத்தைத்தான் ஆண்டவர் சொல்கிறார். நீ இஸ்ரவேல்தான்! யாக்கோபின் வம்சம்தான் கர்த்தரின் நாமத்தில் ஆணையிட்டு, இஸ்ரவேலில் தேவனை அறிக்கையிடுகிறாய். யூதாவின் ஊற்றில் சுரந்த உன் வாழ்வில் எத்தனை மீறுதல்கள்! எத்தனை துரோகங்கள் உண்மையும், நீதியும் இல்லாமல் கர்த்தருக்கு மகிமையை செலுத்தாமல், வேறு ஒன்றுக்கும், இல்லாவிட்டால்  மகிமையை தனக்கும் எடுத்துக்கொண்டு வாழ்கிற இந்த வாழ்க்கையை விட்டு உன்னை சீர்ப்படுத்த வேண்டும் என்று ஆண்டவர் எதிர்பார்க்கிறார். 9-ஆம் வசனத்தில் இப்படி வாழ்கிற நம்மைப் பார்த்து என் நாமத்தினிமித்தம் என் கோபத்தை நிறுத்தி வைத்தேன். உன்னை சங்கரிக்காதபடிக்கு நான் என் புகழ்ச்சியினிமித்தம் உன்மேல் பொறுமை-யாயிருப்பேன் என்கிறார். அதனால் தான் நெகேமியா 9:16,17-ல் எங்கள் பிதாக்கள் அகங்காரமாய் நடந்து, தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி உம்முடைய கற்பனைகளுக்குச் செவிகொடாதே போனார்கள். செவிகொடுக்க மனமில்லாமல் நீர் செய்த அற்புதங்களை நினையாமல், தங்கள் அடிமைத்தனத்திற்கு திரும்ப தங்கள். கழுத்தைக் கடினப்படுத்தி தங்களுக்கு ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொண்டாலும், வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும் மகா கிருபையுமுள்ளவருமான தேவனாகிய நீர் அவர்களை கைவிடவில்லை. என்கிறார். எபிரேயர் 12:25-ல் பேசுகிறவருக்கு நீங்கள் செவி கொடுக்கமாட்டோம் என்று விலகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் பூமியிலே பேசினவருக்கு செவி கொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள், தப்பிப் போகாமலிருக்க பரலோகத்திலிருந்து பேசுகிறவரை  நாம் விட்டு



விலகினால் எப்படித் தப்பிப்போவோம் என்று வாசிக்கிறோம். பூமியில் ஒரு அதிகாரத்திற்கு செவிகொடாமல், அவர்கள் சொல்கிறதை செய்யாமல் இருந்தால் நம்மை சும்மா விடுவார்களா? நாம் அதற்கு பயப்படுகிறோமே! கணவர் வந்தால் அவர் சொன்னபடி செய்யவில்லை என்று கடிந்து கொள்வாரே! அப்பா வந்தால் திட்டுவார் என்று நடக்கிறோமே! அப்படியானால பரலோகத்திலிருந்து பேசுகிறவருக்கு நாம் எவ்வளவு பயந்து அவர் வார்த்தைகளை கடைபிடிக்க வேண்டும். ஆனால் பல சமயத்தில் அனுதினமும் நாம் தவறுகிறோம். ஆனால் வெகுவாய் மன்னிக்கிறவர், இரங்குகிறவர் நம்மை கைவிடாமல் நடத்துகிறார். அவர் நாமத்தினிமித்தம் கோபத்தை நிறுத்தி வைத்து, அவர் புகழ்ச்சியினிமித்தம் நம்மேல் பொறுமையாய் இருக்கிறார்.
எசே 36:23-ல் அவருடைய மகத்தான பரிசுத்த நாமத்தை நாம் தீமையான நடக்கைகளால் பரிசுத்த குலைச்சலாக்கின போது அவர் என் நாமத்தை பரிசுத்தம் பண்ணுவேன் என்கிறார். அதனால்தான் மத் 6:9-ல் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று ஜெபிக்க சொல்லிக் கொடுத்தார். இன்றே இரட்சண்ய நாள், இதுவே அநுக்கிரக காலம். எனவே கிறிஸ்துவின் அன்பண்டை ஓடி வந்துவிடுவோம்.

**இந்த வசனம் எனக்கு என்ன சொல்கிறது? ஆலோசனையா? வழி நடத்துதலா? பாவத்தைக் குறித்து எச்சரிப்பா? ஆறுதலான வாக்குத்தத்தமா? வரபோகிற காரியமா? என்பதைக் கவனித்தால் அதன் மூலம் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம்.**

## நீங்கள் கேட்கிற விதத்தை கவனியுங்கள்

நாம் பேசும்போது சிலர் நின்று கவனித்து கேட்பார்கள், சிலர் சில வேளையை செய்து கொண்டு சொல்லுங்க கேட்கிறது என்று சொல்வார்கள். சிலர் பிரயாணம் பண்ணிக் கொண்டே சில பாடல்கள், செய்திகளை கேட்பார்கள். வேதத்தில் விதைக்கிறவன் ஒருவன் விதைக்கச் செல்லும் போது சில விதைகள் வழியருக்கே, பாறை நிலத்தில், முட்செடியில், நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் என்று பல விதங்களை விளக்கிக் கூறி விட்டு, ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்து கவனியுங்கள் என்று லூக் 8:18-ல் ஆண்டவர் சொல்கிறார்.என் வார்த்தைகள் உங்கள் இருதயத்தில் விழுந்த உடனே பிசாசானவன் அதை மறக்கப் பண்ணி பறித்துக் கொண்டு போகிறானா? சற்று முளைத்து வருகிறதை பாடுகளாலும் பிரச்சனைகளாலும், ஐசுவரியத்தின் மயக்கத்தாலும், சிற்றின்பங்கள் இச்சைகள், உலக கவர்ச்சிகள் இவைகளால் நெருக்கிவிட்டதா? இல்லை முப்பதும், அறுபதும் நூறுமாக பலன் கொடுக்கிறதாய் இருக்கிறதா? நீங்கள் எந்த விதத்தில் கேட்கிறீர்கள்? என்பதைக் கவனியுங்கள் என்கிறார். ஆண்டவர் சீஷர்களிடத்தில் லூக் 9:44-ல் நீங்கள் இந்த வார்த்தைகளைக் கவனமாய் கேளுங்கள். மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படப்போகிறார் என்று கவனமாய் கேளுங்கள் என்று சொல்லித்தான் சொல்கிறார். ஆனால் அவர்களோ 45 வசனம் சொல்கிறது. அவர்கள் அந்த வார்தையின் கருத்தை அறியவில்லை. அது அவர்களுக்கு தோன்றாமல் மறைபொருளாயிருந்தது. அந்த வார்த்தையைக் குறித்து அவரை விசாரிக்கப் பயந்தார்கள். அதை அறிந்து கொள்ள விரும்பாமல், ஆண்டவரிடமும் கேட்காமல் ஏனோ தானோவென்று இருந்து தங்களுக்குள் யார் பெரியவன்? என்று சர்ச்சை பண்ணிக் கொண்டிருந்தார்கள். சில வேளைகளில் சில வசனங்களின் அர்த்தம் நமக்கு விளங்குவதில்லை, மறைப்பொருளாய்தான் இருக்கிறது. ஆனால் ஆண்டவர் கவனமாய் கேளுங்கள் என்று சொல்லும்போது சோம்பல்படாமல், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப்போடாமல் இந்த வசனம் எனக்கு என்ன சொல்கிறது? ஆலோசனையா? வழி நடத்துதலா? பாவத்தைக் குறித்து எச்சரிப்பா? ஆறுதலான வாக்குத்தத்தமா? வரபோகிற காரியமா? என்பதைக் கவனித்தால் அதன் மூலம் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். எபிரேயர் 4:2-ல் கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியால் அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்கு பிரயோஜனப்படவில்லை. மிக முக்கியமான ஒன்று விசுவாசம். வசனத்தை நாம் விசுவாசத்தோடு ஏற்றுக் கொண்டால் அதை கேட்டால் அந்த வசனம் அப்படியே பலிக்கிறது. எனவே நாம் எப்படி இந்த வார்த்தைக்கு செவிகொடுத்து கேட்கிறோம் என்பதை கவனித்து நம்மை சரி செய்து கொள்வோம்.

## எனக்கு செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் அமைதியாயிருப்பான்

ஆண்டவருக்கு செவிகொடுக்கிறவர்கள் வாழ்வில் என்ன நன்மை உண்டாகும் நீதி 1:33-ல் எனக்கு செவி கொடுக்கிறவன் எவனோ அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான். நாம் ஆண்டவருக்கு செவிகொடுத்தால் ஆபத்துக்கு பயப்படாமல் அமைதியாயிருப்போம். நம்மை சுற்றி என்ன நடந்து கொண்டிருந்தாலும், ஒரு தீமையும் நம்மை அணுகாமல் அமைதியாய் இருப்போம். புயல், காற்று, கடல் கொந்தளிப்பு இவைகளின் நடுவில் சீஷர்கள் சென்ற அதே கடலில், அதே படகில் இயேசு இருந்தார். ஆனால் பிதாவுக்கு செவிகொடுத்து, தாமாக எதையும் செய்யாமல், அவர் என்ன செய்யச் சொல்கிறாரோ அதையே இயேசு செய்ததாலேயே கொந்தளிப்புகள் நடுவே படகில் அமைதியாய் நித்திரை செய்தார். அதேபோல எல்லா சூழ்நிலையிலும் இயேசுவுக்கு செவிகொடுக்க நம்மை அர்ப்பணிப்போம். அப்போது அமைதி நம் வாழ்வில் உண்டாகும். ஏசா.48:17,18,19-ல்.. தேவனாகிய கர்த்தர். ஆ என் கற்பனைகளை கவனித்தாயானால் நலமாயிருக்கும் அப்பொழுது உன் சமாதானம் நதியைப்போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலும் இருக்கும். அப்பொழுது உன் சந்ததி மணலத்தனையாகவும், உன் கர்ப்பப்பிறப்பு அதின் அணுக்களத்தனையாகவும் இருக்கும். நம்மை போதித்து நடத்துகிற கர்த்தரின் கற்பனைகளை கவனித்து நடந்தால் நம் சமாதானம் நதியைப்போல இருக்கும். நம் சந்ததி மணலத்தனையாய், அணுக்களத்தனையாய் பெருகவும், பலுகவும் செய்வார். சங் 81:13,14-ல் ஆ என் ஜனம் எனக்கு செவிகொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும். நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாய் திருப்புவேன். நாம் ஆண்டவருக்கு செவிகொடுத்து, அவர் வழிகளில் நடக்கும் போது நமக்கு எதிராய் வருபவர்களை ஆண்டவர் சீக்கிரத்தில் தாழ்த்திப் போடுவார். அவர் கையை சத்துருக்கு விரோதமாய் திருப்புவார். பார்வோனும், அவன் சேனையும் திரும்ப இஸ்ரவேல் வாழ்வில் வரவே முடியாத அழிவு வந்தது போல சத்துருக்கள் இச்சகம் பேசி அடங்கி போவார்கள். உபா 28:9,10-ல் நீ உன்தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை கைக்கொண்டு அவர் வழிகளில் நடக்கும்போது கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே உன்னை தமக்கு பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார் அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்கு தரிப்பிக்கப்படும் என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்கு பயப்படுவார்கள். நாம் அவருக்கு செவிகொடுத்து அவர் வழிகளில் நடக்கும்போது பெரிய பாக்கியம். நம்மை அவருக்கு பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார். அவருடைய நாமம் நமக்கு தரிக்கப்படும் அதைக் கண்டு பூமியின் ஜனங்கள் பயப்படுவார்கள். நீ என் பிள்ளைதான் என்று தமது நாமத்தை நமக்கு தரிப்பிப்பது, நம்மை நிலைப்படுத்துவது எவ்வளவு மேலானது. 14 ஆம் வசனத்தில் நீ எனக்கு செவிகொடுத்தால் கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். நீ கீழாகாமல் மேலாவாய் என்கிறார். ஏசா 1:19-ல் நீங்கள் மனம் பொருந்தி செவி கொடுத்தால் தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள் என்கிறார். எத்தனை மேன்மை! நாம் கர்த்தருக்கு செவிகொடு-த்து, அவர் வழிகளில் நடந்து, கட்டளைகளைக் கைக்கொள்ளும் போது இத்தனை மேன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் அவர் வைத்திருக்கிறார். எனவே தான் பிள்ளைகளே எனக்கு செவிகொடுங்கள் என்கிறார். சவுலுக்கு சொல்லப்பட்டதுபோல பலிகளைக்காட்டிலும் செவிகொடுக்க சேர்வதே கர்த்தருக்கு பிரியம் என்பதை அறிந்து இன்னும் எதில் நாம் தவறி இருக்கிறோமோ உண்மையாய் அவரிடம் வந்து தம்மை தாழ்த்தி இரக்கத்தை பெற்று மகிழ்ச்சியோடும், வெற்றியோடும் வாழ்வோம். என் ஆண்டவர் தாமே நாம் சரி செய்து கொள்ள வேண்டிய விஷயத்தில் நமக்கு உதவி செய்து நம்மை நம் ஆத்துமாவை காப்பாற்றுவாராக!.




# ஏன்? தான் எனக்கு இந்த பாடோ!

பிரேமா டேவிட்

அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்- எபிரெயர் 2:18

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, நம்முடைய பாடுகளை சிலுவையில் சுமந்து தீர்த்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

ஏன் தான் எனக்கு இந்த பாடோ! என்று உங்க அம்மா, அப்பா மட்டுமல்ல நீங்களும் சொல்லிட்டுத்தானே இருக்கீங்க! நான் ரொம்பவே **Suffer** ஆயிட்டேன், **Over Stress** என் மனசே வலிக்குது என்று நீங்கள் பெருமூச்சு விடுவதும் நன்றாக புரிகிறது. படிக்கிறதில ஆர்வமின்றி பரீட்சை பயத்தில, பெற்றோர், ஆசிரியர்கள், அதிகாரிகளின், வேதனையான வார்த்தைகளாலே **Friends**-களின் (தோழர்கள்) கலாய்ப்புகளாலே அடிக்கடி உடம்பு சுகமில்லாம போறதால, அம்மா, அப்பா, மருத்துவரிடம் கூட சொல்ல முடியாம கஷ்டப்படுகிறேனே... எனக்கு உதவி செய்ய யாருமேயில்லையா என்று கூப்பிட்டுக் கொண்டிருக்கிற உங்களுக்கு உதவி செய்வதற்காகவே பாடுபட்ட இயேசு இருக்கிறார். நம் எல்லாருடைய பாடுகளை தன்மேல் ஏற்றுக்கொண்டு நம் எல்லாரைப் போல **Sufferings, Stress, Pain**, மன அழுத்தம், துன்பம், வருத்தம், கஷ்டம், போன்ற வேதனையை அனுபவித்து சிலுவையில் மரித்து உயிரோடு எழுந்த இயேசுவால் மட்டுமே உங்கள் பாடுகளிலிருந்து உங்களை காப்பாற்ற முடியும். அவர் ஒருவர் மட்டும்தான் உங்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். தான் பாடுபட்டாவது உங்களுக்கு உதவி செய்ய வேண்டும், உலகிலுள்ள எல்லாரையும் பாடுகள், பாவங்கள், பாதாள வல்லமையிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே அவர் கல்வாரி சிலுவையிலே பாடுபட்டார். இயேசு பட்டபாடுகளிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? நாம் அறிந்து கொள்வது என்ன?

## கீழ்ப்படிதல்

அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி (எபி 5:8,9)

ஆப்பிரிக்காவின் காட்டுப்பகுதியிலே ஒரு நாள் ஊழியர் ஒருவர் நடந்து சென்று கொண்டிருக்கும் போது, ஆவியானவர், மகனே!, இங்கே நின்று இந்த குரங்களுக்கு சுவிசேஷத்தைச் சொல் என்றார். இவருக்கு தலைச்சுற்றியது. ஆண்டவரே, பாஷை தெரியாதவர்களுக்குக்கூட சுவிசேஷம் சொல்லி விடலாம். ஆனால் குரங்களுக்கு..... எப்படி நான்? என்று கேட்டார். நான் சொல்கிறேன் நீ இந்த குரங்குகளுக்கு சுவிசேஷம் சொல்ல நான் உன்னோடு இருக்கிறேன் என்றார் ஆண்டவர். ஏனென்றால் அங்கே 20, 25 குரங்குகள் பேன் பார்த்துக்கொண்டு, வாலை-ப்பிடித்துக் கொண்டும், மரங்களில் தாவிக்கொண்டும், சேட்டைகள் செய்து கொண்டிருந்தன. அவர் தயங்கித்தயங்கி இயேசுவின் பாடு மரணம் உயிர்-த்தெழுதலை, சுவிசேஷ-த்தைச் சொன்னார். குரங்குகளெல்லாம் இன்னும் மும்முரமாக சேட்டையைச் செய்தன. முடிவில் ஒப்புக்கொடுக்கும்படி முன்னே அழைப்பு கொடு என்றார் ஆண்டவர். ஊழியரும் குரங்குகளை நோக்கி, இயேசுவை சொந்த இரட்சகராக, தெய்வமாக



ஏற்றுக்கொண்டவர்கள் முன்னால் வாருங்கள் என்றார். ஒரு குரங்காகிலும் முன்னே வரவில்லை அவர்களுக்காக ஜெபம் பண்ணு என்றார் ஆண்டவர். ஆண்டவர் சொன்னபடியே ஜெபம் செய்துவிட்டு கண்களைத் திறந்தார். பெரிய ஆச்சரியம்! புதர்களில் ஒளிந்திருந்த 18 கருப்பு காட்டு மனிதர்கள் இவர் முன்னால் முழங்காலில் நின்றனர். அனைவரும் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். அந்த ஊழியர் ஆண்டவரின் வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படிந்ததால் 18 பேர் இரட்சிக்கப்பட்டனர். ஆண்டவர் சொன்னதை அப்படியே கேட்டுக் கீழ்ப்படிந்த அந்த ஊழியரின் கீழ்ப்படிதல் 18 ஆத்துமாக்கள் (நீக்ரோக்கள்) ஆண்டவரின் பிள்ளையாக மாற காரணமாயிற்று. ஆதாமின் பாவம் மனுக்குலம் முழுவதையும் பிடித்துக்கொண்டபோது, அவர்களை விடுவிக்க பிதா, இயேசுவை உலகிற்கு அனுப்பும் திட்டத்தை இயேசுவிடம் சொன்னபோது, அவர் அப்படியே அதை ஏற்றுக்கொண்டு தன்னைத் தாழ்த்தி, பிதாவுக்கு கீழ்ப்படிய தன்னை ஒப்புக்கொடுத்தார். ஆண்டவர் இயேசுவும் தம்முடைய ஜனங்களை பரிசுத்தம் செய்யும்படியாக, பாடுகளிலிருந்து விடுவிக்கும்படியாக எருசலேம் நகருக்கு வெளியே பாடுபட்டார். (எபி 13:12). அந்தப் பாடுகள் வீண் போகவில்லை, அவர் பாதாளத்தை, மரணத்தை சாத்தானை ஜெயித்து, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். அதோடு கோடி கோடியான ஆத்துமாக்களை இரட்சித்தார் இன்றும் இரட்சித்து காப்பாற்றுகிறார். இயேசு கீழ்ப்படியாமல் மறுத்திருந்தால் நம் நிலை என்னவாயிருக்கும்? ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.(ரோம5:19). நீங்களும் இயேசுவைப்போல தேவனுக்கும், பெற்றோர்களுக்கும் பயந்து சின்ன, பெரிய காரியத்தில் கீழ்ப்படிந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்..மற்றவர்களும் நீதிமான்களாய் மாற உதவுங்கள்.

## தேவஅன்பு

**கர்த்தரோ, அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார் (ஏசா53:10).**

“தேவன் தம்முடைய ஒரே பேறானகுமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய்உலகத்தில் அன்பு கூர்ந்தார்” (யோவா.3:16).

தம்முடைய சாயலாய் உருவாக்கப்பட்ட மக்கள் பாவம், சாபம், வேதனை, கண்ணீரில் மூழ்கினதைப்பார்த்து, என் ஜனங்கள் அப்படியே அதில் அழிந்து போவார்களே, கெட்டுப் போய்விடுவார்களே என்ற அவரின் அன்பும், மனதுருக்கமும் தான், தன் குமாரன் இயேசுவை நமக்காகச் சிலுவையில் நொறுக்கும்படி செய்தது. அவர் நொறுங்கினாலும் பரவாயில்லை. அவர் மரணத்தை, பாடுகளை, சாத்தானை ஜெயித்து மீண்டும் உயிர்த்தெழுந்து ஜனங்களை காப்பாற்றி விடுவார் என்ற பிதாவின் எண்ணத்தின்படியே இயேசு தன் ஆத்துமாவிலே, ஆவியிலே, சரீரத்திலே மனுக்குலம் முழுவதின், உங்களுடைய, என்னுடைய பாடுகளையும் சுமந்து கொண்டார். தமக்காகவும், தம்மாலேயும், சகலத்தையும் உண்டாக்கினவர் அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் இவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திவங்களினாலே (பாடுகளாலே) பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது. (எபி2:10, ஏசா13:10). பாடுகளிலும், வேதனைகளிலும் உலக சிற்றின்பத்திலும், மயக்கத்திலும் குற்ற உணர்ச்சிகளிலும் இருக்காமல் உங்கள் மேல் அன்புகூர்ந்து தன் குமாரனையே பாடுகளுக்கு உட்படுத்தினவரிடம் சீக்கிரம் வாருங்கள். சிலுவை முன் நின்று இயேசுவே, எனக்காக பாடுபட்டவரே, என் பாடுகளை ஏற்றுக்கொண்டவரே, என் பாடுகளை மாற்றும், என் பாவங்களை மன்னியும் என்று கேளுங்கள். அவரின் பிள்ளையாய் மாறுங்கள். உங்களைப் பார்த்து தேவனின் உள்ளம் சந்தோஷப்படும். தொடர்ந்து தேவனுக்காகவே வாழுங்கள். தேவ அன்பையும், கீழ்ப்படிதலையும் தந்து கர்த்தர் உங்களை வழிநடத்துவாராக. உங்கள் பாடுகளிலிருந்து விடுதலை தருவாராக.


ஜெப உதவிக்கு

1800 309 9333

+91 944 28 00 447

+91 944 28 00 449






# அரசன் கொடுத்த டாஸ்க்

ஹலோ குட்டீஸ்!,

இயேசுவை அறியாத அரசன் ஒருவனுடைய அவையில் கிறிஸ்தவ புலவர் ஒருவர் இருந்தார். ஒரு நாள் அரசன் அந்தப் புலவரை வரவழைத்து, நீயும் இயேசு தான் உண்மையான தெய்வம் என்கிறாய், உனக்கு ஒரு **Task** (டாஸ்க்) தரப்போகிறேன். அந்த **Test**-ல் நீ **Pass** ஆகிவிட்டால் இயேசு உண்மையான தெய்வம் என்று நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றார். **Task** என்னவென்றால் நான் ஒரு காசை (நாணயம்) மேலே தூக்கிப்போட்டுக் கையில் பிடிப்பதற்குள்ளாக முழுபைபிளிலும் சொல்லப்பட்டுள்ளது என்ன என்பதை எனக்கு சொல்ல வேண்டும் என்றார். அதற்கு அந்த புலவர் அரசே, எனக்கு ஒரு வாரம் **Time** கொடுங்க என்றார் அரசனும் சரி என்றார். ஒரு வாரத்திற்குப்பின் புலவர் அரசன் முன் நின்றார். அரசனும் எங்கே உனக்கு கொடுத்த **Task**-ஐ எப்படி செய்கிறாய் என்று பார்க்கிறேன் என்றார். அரசன் காசை வானத்தை நோக்கி, உயர மேலே தூக்கிப்போட்டார். புலவரும் பைபிளைப் பற்றிக் கூறத் தொடங்கினார். ஆதாமும், ஏவாளும் பாவஞ் செய்ததால் தேவன் தனது குமாரன் இயேசுவை உலகத்திற்கு அனுப்பினார். அவர் சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்தார் என்று சொல்லி முடிக்க, காசும் கீழே வந்து விழுந்தது. அரசனுக்கோ ஒரே ஆச்சரியம். எப்படி உன்னால் இதை இவ்வளவு சீக்கிரம் சொல்ல முடிந்தது என்று கேட்ட போது புலவர் சொன்னார், கடந்த ஒரு வாரமும் நான் இயேசப்பாவிடம் ஜெபம் பண்ணினேன். அவரே எனக்கு இதை சீக்கிரமாய், சுருக்கமாய் சொல்லிக் கொடுத்தார் என்று சொன்னவுடன் அந்த அரசனும் உன்னோடு பேசின இயேசுவே மெய் தெய்வம் என்பதை இப்போது மனதார ஏற்றுக்கொள்கிறேன் என்றார். அன்பு குட்டீஸ், இயேசப்பா நம்ம பாவம் நீக்குவதற்காக சிலுவையில் மரித்து, உயிர்த்தெழுந்த உண்மையான தெய்வம் என்பதை அந்த அரசனைப்போல நம்பி ஏற்றுக் கொள்வீங்களா?.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா, என் பாவத்தை நீக்க எனக்காக மரிச்சீங்க, எனக்காக உயிரோடு எழுந்தீங்க என்பதை விசுவாசிக்கிறேன். என் உள்ளத்திற்குள்ள வாங்க இயேசப்பா, என்னைய உங்க பிள்ளையாய் ஏற்றுக் கொள்ளுங்கப்பா இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாட வசனம்

நீர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக ரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் யோவான் 4:42.



# THANK YOU JESUS

## ஜீவனுள்ள தேவன் செய்த அற்புதங்களில் சில



**சகோதரர். ஆன்டனி திருச்சி.**

நான் பயணம் செய்த பேரூந்தின் பின் டயர் வெடித்ததில் பேரூந்தின் கடைசி இருக்கையில் அமர்ந்திருந்த நான் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டேன். அன்று உயிர்பிழைத்ததே தேவ கிருபையினால் தான். ஆனால் என் காலில் பலமான அடிபட்டது பேரூந்தில் இருந்த கம்பிகள் காலில் அடித்து, கால் சதையை கிழித்தும் சென்றதால் என் கால் மிகவும் பாதிக்கப்பட்டது. மருத்துவமனைக்குச் சென்று மருந்து மாத்திரை எடுத்தும் பூரண சுகம் கிடைக்கவில்லை. நீண்ட நாட்களாக புண்கள் ஆறவில்லை. நிறைய பணம் செலவழிந்து சரியாகாத சூழ்நிலையில் பொருத்தனை ஜெபத்தை தேவனிடம் ஏறெடுத்தேன். என் கால்களில் இருக்கும் ஆறாத புண்கள் விரைவில் ஆற வேண்டும், எனக்கு பரிபூரண சுகம் தாங்கப்பா, நான் இயேசுவை தினம் பார்க்கிறேன் பத்திரிக்கையில் சாட்சி எழுதுவேன் என்று சொல்லி பெருத்தனை பண்ணி ஜெபித்தேன். என் பெற்றோரும் எனக்காக ஜெபித்தார்கள். தேவன் எங்களின் பொருத்தனையின் ஜெபத்திற்குப் பதில் தந்தார். என் கால்களில் பரிபூரண சுகத்தை தந்து நன்றாக நடக்கச் செய்தார். அவருக்கே எல்லா மகிமை உண்டாவதாக.

**சகோதரி. எஸ்தர் சென்னை.**

கடந்த நாட்களில் பொன்ராஜ் என்பவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நான் தங்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவருடைய சரீர சுகத்திற்காகவும், மருத்துவமனையில் இருந்து விரைவில் வீடு திரும்பவும் ஜெபிக்குமாறு கேட்டுக் கொண்டேன். நீங்களும் அவருக்காக பாரத்தோடு ஜெபித்தீர்கள் தற்போது சுகம் பெற்று மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு வந்து விட்டார். ஜெபித்த உங்களுக்கு நன்றி. சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**சகோதரர். லூர்து. திருச்சி.**

எனக்கு நீண்ட நாட்களாக அல்சர் வியாதி இருந்து கொண்டே இருந்தது. மருந்து மாத்திரை எடுத்தாலும் அல்சர் சரியாகவே இல்லை. வயிற்றுவலியால் மிகவும் கஷ்டப்பட்டேன். மருத்துவரைப் போய் பார்த்தபோது அல்சர் முற்றிவிட்டது இனி ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லி என்னை வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள். வீட்டிற்கு வந்து வலியால் மிகவும் கஷ்டப்பட்டேன். கண்ணீரோடு ஜெபித்தேன். இயேசுவை தினம் பார்க்கிறேன் பத்திரிக்கையில் உள்ள சாட்சிகளை வாசித்தேன். இயேசப்பா இவர்களைப் போல என்னையும் சாட்சியாக வாழ வையுங்க, எனக்கு அல்சர் வியாதியிலிருந்து சுகம் தாங்க என்று ஜெபித்தேன். மருத்துவர்களால் கைவிப்பட்ட என்னை தேவன் கைவிடவில்லை என்னை சுகமாக்கினார். தற்போது நான் எந்த வலியும் வேதனையும் இல்லாமல் நல்ல சுகத்தோடும், பெலத்தோடும் இருக்கிறேன். தேவன் எனக்கு பரிபூரண சுகம் தந்தார், அவருக்குச் சாட்சியாக வாழ கிருபை செய்தார். அவருக்கே மகிமை.

**சகோதரி. கஸ்தூரி திருப்பூர்**

நான் நல்லபடியாக வீட்டைக் கட்டி முடிக்கவும், தேவைகள் சந்திக்கப்படவும், அதில் நல்ல நபர்கள் வாடகைக்கு வர வேண்டும் என்று தேவனிடம் பொருத்தனை செய்து நானும் ஜெபித்தேன், தங்களிடமும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்கக் கேட்டுக் கொண்டேன். தேவன் எனக்கு கிருபை செய்து வீட்டை நல்லபடியாக கட்டி முடிக்கவும், நல்ல நபர்கள் வீட்டிற்குக் வாடகைக்கு குடிவரவும் தேவன் அநுக்கிரகம் செய்தார். ஜெபித்த உங்களுக்கு நன்றி. இயேசப்பாவுக்கு ஸ்தோத்திரம்.






## வாசகர்கள் கவனத்திற்கு !

வாசகர்கள் வசிப்பதற்கு எளிதாக நமது இயேசுவை தினம் பார்க்கிறேன் மாத இதழ் கலரில் அச்சஅடிக்கப்பட்டு வெளிவர தேவன் கிருபைசெய்தார்.
உங்கள் சந்தாவை இனி G-PAY மூலம் செலுத்தலாம் மற்றும் இந்த ஆண்டிற்கான உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள். G Pay +91 944 3009 333


கடைசிகால சுவிசேஷ ஒளியை
பரவச்செய்யுங்கள்
Lets Spread the Light of end Time Gospel!
எப்படி செய்வது? என்ன செய்வது?
சனிக்கிழமைதோறும் மாலை 6 மணிக்கு
JESUS LIVES MINISTRIES & VINCENT SELVAKUMAR
YouTube காணத்தவறாதீர்கள்.
செய்தியாளர்கள்
தீர்க்கதரிசி. வின்சென்ட் செல்வகுமார்
சகோதரர். வின்சென்ட்ராஜ்

# ஊழியத்திற்கு ஆட்கள் தேவை

JOIN OUR TEAM

இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு
இணைந்து ஊழியம் செய்ய
அர்ப்பணமுள்ள உடன் ஊழியர்கள்
“அவசர தேவை”

- Data Entry Operators
- Prayer Warriors
- Video Editors
- Social Media Developers
- Office Administrator
- Keyboardist
- Stenographers
- Motion Graphics Designers
- Office Assistants
- Drivers
- Cook
- Magazine Designer’s

மதுரை, செம்பட்டி, சென்னை ஊழிய அலுவலகங்களில் ஊழிய வாஞ்சையுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும்

வாசகர்கள் கவனத்திற்கு!! கடைசி கால சுவிசேஷ பணியை மேற்கொள்வதற்கு உங்களுக்கு தெரிந்தவர்களை இப்பணிகளுக்கு பரிந்துரை செய்யுங்கள் மேலும் அலுவலக விவரங்களுக்கு மட்டும் +91 7825 04 7825

## மீடியா மற்றும் ஐடி துறையின் சிறப்பு பயிற்சி வகுப்புகள் (3 மாதங்கள் மட்டும்)

Training Institute

**மீடியா துறையில்**

Camera, Editing, Program Production, Direction, Out door production ,Photoshop, Graphics, Motion Graphics மற்றும் மீடியா துறை சார்ந்த நுணுக்கங்கள் கற்று தரப்படும்

**ஐடி துறையில்**

Website Development. Website management, Android and iOS development etc.

**கல்வி தகுதி:**

ஏதேனும் பட்டப்படிப்பு (அல்லது) +2 (படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறன் உள்ளவர்களுக்கு)

(உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்) பயிற்சி முடித்தபின் சான்றிதல் வழங்கப்படும்

ஊழிய வாஞ்சையுடன், பயிற்சியில சிறந்துவிளங்குவோர்க்கு நமது சென்னை மற்றும் மதுரை அலுவலகத்தில் உடனடி வேலை வாய்ப்பு வழங்கப்படும்.



ஆன்லைன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க
www.dprince.in/training

மேலும் விவரங்களுக்கு:
+91 7825 04 7825

# நடப்பு செய்திகள்

## கொரோனாவால் குழந்தைகளின் வாசிப்பு திறன், பாதிப்பு - கருத்துக்கணிப்பு முடிவு

கொரோனா தொற்று நோயால் குழந்தைகளின் வாசிப்பு திறனும், எண்ணும் திறனும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஒரு கருத்துக்கணிப்பு முடிவு கூறுகிறது. மேற்கு வங்காளத்தில் பிரதம் கல்வி அறக்கட்டளை மற்றும் கல்லீரல் அறக்கட்டளையும் இணைந்து ஒரு கருத்துக்கணிப்பை மேற்கு வங்காளத்தில் நடத்தி உள்ளன. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம், மேற்கு வங்காளத்தின் 17 மாவட்டங்களில் 11 ஆயிரத்து 189 குழந்தைகள் இந்த கருத்துக்கணிப்பில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இதன் முடிவில் பல முக்கிய தகவல்கள் வெளியாகி உள்ளன.

3-ம் வகுப்பில் 2-ம் வகுப்பு பாடங்களை 2014-ல் 32.9 சதவீதத்தினரும், 2018-ல் 36.6 சதவீத-த்தினரும் வாசிக்க முடிந்த நிலையில் தற்போது கொரோனா தொற்று காலத்தில் இது 27.7 சதவீதமாக குறைந்துள்ளது.

5-ம் வகுப்பில் உள்ள மாணவர்களில் 2-ம் வகுப்பு பாடங்களை 2014-ல் 51.8 சதவீதத்தினரும், 2018-ல் 50.5 சதவீதத்தினரும் வாசிக்க முடிந்தது. தற்போது இது 48 சதவீதமாக குறைந்துள்ளது.

2-ம் வகுப்பில் குறைந்தபட்சம் வார்த்தைகளை வாசிக்கிற திறன் 2014-ல் 54.8 சதவீதமாகவும், 2018-ல் 66.2 சதவீதமாகவும் இருந்தது. தற்போது 53 சதவீதமாக குறைந்துள்ளது.
இந்த முடிவுகளை நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் அபிஜித் விநாயக் பானர்ஜி, இணையவெளியில் வெளியிட்டார். மாணவர்களின் வாசிப்பு திறன், எண்ணுகிற திறன் குறைந்திருப்பது குறித்து இவர் கருத்து தெரிவிக்கையில், "ஊரடங்கு பொதுமுடக்கம், மாணவர்களின் அடிப்படை கல்வி கற்றலுக்கு இடையூறாக உள்ளது. தற்போது கொரோனா நிலைமை மேம்பட்டுள்ளது.


## Statement about ownership and particulars about newspaper

### Yesuvai Thinam Parkirean

- Place of Publication: Madurai    Date:27.03.2022
- Periodicity of its Publication: Monthly
- Printers Name, Nationality, Address:C.Chellachamy,Indian, Prism Printers,Madurai.
- Publisher's Name, Nationality, Address:L.Vincent Raj Indian.
- Editor's Name, Naonality, Address:L.Vincent Raj Jesus Lives Trust 54, A.I.B.E.A nagar Paravai Madurai -625402
- Name and addresses of Individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.

L.Vincentraj, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai

L.Vincentraj

L. Vincentraj

Signature of Publisher

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | JESUS LIVES TRUST | A/C NAME | L.VINCENT RAJ |
| BRANCH | KOCHADAI MADURAI | BRANCH | MADURAI |
| BANK NAME | UNION BANK OF INDIA | BANK NAME | AXIS BANK |
| A/C.NO | 493902010001022 | A/C.NO | 109010100247030 |
| IFSC CODE | UBIN0549398 | IFSC CODE | UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

**3) காசோலை(CHEQUE)**
JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333

**5) மணியார்டர்(E.M.O) :** இயேசு வாழ்கிறார் 54/ பேங்க் காலனி –ஏ
பரவை ,மதுரை–625402

भारतीय डाक
India Post

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S







TO:

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.